பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } குரோதன-ஹு தை-மீ 1926-ஹு ஜனவரி-மீ { பகுதி 1.

பாரத தேசீய கீதம்.

எம்முடைய தாயகத்தை ஈசனென்றும் காத்தருள்க.
நம்முடைய நேயமிகு நாடுசெழித் திடுமாறே
அம்மையுமை யொருபாகன் அருள்புரிக மனமுவந்தே.
செம்மைதிகழ் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க. (1)

பாரதநற் றாயினது பழஞ்சரிதை பாடுமினோ
வீரமிகு மாதரின் மேன்மையையே பாடுமினோ
வாரமிளிர் அவள்பொன்னார் மார்பகமே பாடுமினோ
சீரியநம் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க. (2)

ஸ்ரீராமச் சந்திரன்றன் திருப்புகழே பாடுமினோ
மாராஜ புத்திரர்கள் மகிதலத்தில் வாழ்ந்ததுமுனம்
வீராவே சத்தமர்செய் வியன்புகழே பாடுமினோ
சீராரும் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க (3)

ணிமப்றசிர் அக்பரது வண்புகழே பாடுமினோ
துய்யநம் சிவாஜியுடைத் தொல்புகழே பாடுமினோ
பொய்யில்சுதந் திரப்பாக்கள் புனைந்துதினம் பாடுமினோ
செய்யபுகழ்ப் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க. (4)

சுடலையிடை நடனமிடும் தூயசிவ பெருமானே!
தடதடவென ஒலிபரப்பும் தமருகத்தின் நாதமெல்லாம்
கடல்புடைசூழ் காசினியில் கடிதில்நனி பரப்பிடுக
திடமிகுநற் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க. (5)

தீதுநலம் எவைவரினும் சிறிதேனும் கலங்காமே
மேதினியில் செய்கடன்செய் மேதகைய ஆண்டகையாம்
மாதுணிவார் வீரமிகு மனம்எமக்குத் தந்தருள்க
தீதில்புகழ்ப் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க. (6)

—உரிமையாசிரியர்.

உ

போந்தும் மங்களம் எங்கும் தங்குக,

நமது பத்திரிகை.

உருத்திரோற்காரி ௵ புரட்டாசி௴ தொடக்கப்பட்டதும், ஆரம்பதினமுதல் உரியகாலங்களில் தவறாது வெளிப்போந்து நலம் புரிந்து வந்ததுமான நமது "நச்சினார்க்கினிய"னைச் சிற்சில காரணங்களால் நிறுத்த நேர்ந்த விஷயம் எம்மை யறிந்தோர் அனைவரும் அறிவர்.

யாம் எத்தகைய துன்பத்திற்குள்ளாகியும், இப் பத்திரிகாபிமானப் பித்து இன்னும் எம்மின் நீங்கவில்லை. சந்தாத்தொகையை நாம் கேட்குமுன் பரிவுகூர்ந்தனுப்பியும், 'மனந்தளராது பத்திரிகையைத் தொடங்கவேண்டும்' என்று அடிக்கடி கடிதங்கள் எழுதியும் எம்மை ஊக்கி உள்ளாரும் இதற்குக் காரணர். அவர்கள் ஸ்ரீமான்களான A. R. ஸ்ரீநிவாசமுதலியார், S. R. கங்காஜடேசர்மா, S. R. கணபதி சுப்பிரமணிய ஐயர், S. ஜம்புநாதன், S. வேதமுத்து, V. P. சுப்பிரமணிய முதலியார், Father மிராந்தா, V. T. சம்பந்தம், ரத்தினசாமி நாயுடு, ராம. அழகு முதலியோர்களாவர். இன்னோரது மெய்யன்பை ஒருபோதும் மறவோம். இவர்கள் பன்னூறு மைல்களுக்கப்பால் இருப்போர்; இச் சிலரிற் பலர், பொருள் சம்பந்தப்பட்டமட்டில் ஏழைகளே. ஆயினும் எம்மிடத்தும் தமிழிடத்தும், அம்மொழியை வளர்க்கும் இப் பத்திரிகையிடத்தும் இவர்கள் கொண்டுள்ள அபிமானம் அளவிட்டுரைத்ததற்கரியதே.

இவர்களினும் தாழாப் பேரன்பும் தமிழபிமானமும் வாய்ந்த எம் தற்கால நன் மாணவகச் சிரஞ்சீவிகள் சிலரும், சேதுபந்தனம் செய்ய உதவ முன்வந்த சிற்றணில்கள்போல், இப்பத்திரிகை விஷயமாய் இயன்ற உதவிசெய்ய முன்வந்துள்ளனர். இவ் விருதிறத்த தமிழபிமானப் பெருஞ்செல்வர்களும் பயனுற்றவும பயனெய்தவும் விரும்பும் பண்புடையாளர்கள். இன்னோர் தொகை அற்பமாயினும் இவர்கள் 'தக்கோர்கள்' ஆதலின், இவர்கள் அறப்பயன், சிறுமீன் சினையினும் நுண்ணிய ஆலம் வித்தெனப் பெருத்தோங்கி நலந்தருமென்பது எமது துணிபு.

ஆதலின், எல்லாம் வல்ல இறைவனது திருவருளை முன்னிட்டும், எம் பொழுது போக்கு அறிவு வளர்ச்சி தமிழ்த்தொண்டு பொதுநலம் முதலியன கருதியும், முற்கூறிய நல்லோர் சிலர் எம்மை ஊக்குமாறு வலிந்து உதவிய சிறு சந்தாவையே 'மூலநிதி' யாகக் கொண்டும், "உறுபயன கருதாது உஞற்றுக் கடமையை" என்ற

பகவானது கீதா வாக்கியத்தைக் கடைப்பிடித்தும், மீண்டும் இப்பத்திரிகையை நடத்தத் துணிந்து தொடங்கியும் விட்டோம். எம் நிலையையும், எம்மைப் பற்றிய சகல விஷயங்களையும் நன்குணர்ந்த ஜனானுகூல அச்சுக்கூட உரிமையாளரும் தலைவருமான ஸ்ரீமத் T.K. ராஜகோபால நாயுடு அவர்கள், எம்மீதுள்ள இயற்கை மெய்யன்பால், இப்பத்திரிகை விஷயமாய்த் தக்க ஓர் பேருதவி புரிந்துள்ளார், அது காலத்திற் செய்ததும், செய்யாமற் செய்ததும், பயன்றூக்காது செய்ததுமாம். இவ்வுதவி என்றும் மறக்கற்பாலதன்று. 'நாயுடு காருவும் அவரது அபிமானமும் நீடுவாழ்க' என்பதைத் தவிர நாம் மனப்பூர்வமாய்க் கூறவுள்ளது வேறேதுமின்று.

இனி, இப்பத்திரிகை சம்பந்தமாய் நாம் இதனை விரும்பும் சகோதர சகோதரிகட்கு அறிவிக்க விரும்புவன சில உண்டு:

(1) 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்பதை உணராது சிலர் எம் பத்திரிகையின் சிற்றளவொன்றையே கண்டு, அது காரணமாகச் சந்தாதாரர்களாகாதிருந் திருக்கலாமாதலின், இப்பொழுது இதனை முன்னினும் பெரிய அளவில் வெளிவர ஏற்பாடு செய்து விட்டோம். சந்தாதாரர்களின் தொகை மிகுதிக்கேற்பப் பக்கங்களை அதிகப்படுத்துவோம்.

(2) நாம் ஏற்கனவே அறிவித்துள்ளபடி,

"'ஆவிற்கு நீர்' என் றிரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்"

என்பதைப் பெரும்பாலும் கடைப்பிடித்தொழுகலே எம் இயல்பு. 'பல்லெல்லாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டி' எவரிடமும் சென்று யாசியேம். ஆயினும் இப்பத்திரிகையின் முன்னேற்றத்தினும் தமிழ் வளர்ச்சியினும் விருப்பும், எம்மிடம் மதிப்பும் வாய்ந்தோர் வலிந்து புரியும் எவ்வித உதவியையும் ஏற்று அன்னார்க்கு நன்றி கூறுவோம்.

(3) தாம் வருந்திக் கற்று ஆராய்ந்து தெளிந்த அரிய விஷயங்களை உலகோர் உணர்ந்துய்யுமாறு விஷயதானம்புரிந்து எம்மையும் எம் பத்திரிகையையும் கௌரவிக்கும் நல்லோர்க்குப் பல்லாண்டு கூறுவோம். இப்பத்திரிகைக்குப் போதிய நிதி ஏற்படும்பொழுது, எழுதுவோரின் விஷய அருமையை எண்ணி இயன்றவாறு சிரம தக்ஷிணையும் அளிப்போம். அதுவரை, அவர்கள் எழுதும் விஷயம் வந்துள்ள சஞ்சிகைகளைத் தவறாமல் அனுப்பி வருவோம்.

(4) தங்கள் சாமார்த்திய முழுவதும் காட்டிவிடவேண்டுமென்று கருதி, வெகு சிரமப்பட்டுத் திரிசொற்களையே பெரிதும் சேர்த்து, வாசிப்போர்க்கு எளிதிற் பொருள் விளங்கா வண்ணம் எழுதி, தாமே அகமகிழ்வோரின் விஷயதானங்கள் எவ்வளவு அருமையாயினும் அவை இப்பத்திரிகையில் இடம்பெறா.

(5) சாமானிய அறிவு படைத்தவரும், தமிழறிவு மிக்கோராதலைக் காண்டலே எமது விருப்பாதலின், அவர்களை ஊக்குமாறு அவர்கள் ஆசை மேலீட்டால் சிரமப்பட்டு எழுதியனுப்பும் விஷயங்களையும் (அவை வெளியிடத்தக்கவைகளாயிருப்பின்) திருத்திச் சீர்ப்படுத்தி அவர்கள் பெயராலேயே வெளியிடுவோம்.

6. இப்பத்திரிகையில் (1) சிறந்த வியாசங்கள் (2) உபந்யாசங்கள் (3) 'நாவல்'கள் (4) நாடகங்கள் (5) சர்வகலாசாலையாரும் துரைத்தனத்தாரும் தமிழ்மொழி சம்பந்தமாகச் செய்துவரும் மாறுதல்கள்; இம்மாறுதலைப்பற்றிய தமிழகத்தாரின் அபிப்பிராயங்கள் (6) பல்வேறு தமிழ்ச்சங்கங்களும் அனுப்பும் நிகழ்ச்சிக் குறிப்புகள் (7) பிறபாஷைகளிலுள்ள அரிய செய்யுள் நூல், வசன நூல்களின் மொழிபெயர்ப்பு (8) வெளிவராதனவும், வந்தும் மீண்டும் வெளியிடவேண்டியனவுமான நூல்கள் (9) பூதபௌதிக ரசாயன சாஸ்திர நுட்பங்கள் (10) ஒன்றையொன் றிகழாச் சமயக் கொள்கைகள் (11) தமிழ் நூலாராய்ச்சிக் குறிப்புகள் (12) புதிய அழகிய இனிய கவிகள் (13) விடுகதை வினாக்கள் (14) விநோதக் கூற்றுக்கள் (15) யூனிவர்ஸிடி, ஸ்கூல் பைனல் மாணவர்களுக்குப் பயனுறும் பரீக்ஷை வினாக்கள் (16) சைவ வைணவ புராணக் கதைகள் (17) இராமாயண மகாபாரதச் சுருக்கம் (18) அனுப்பப்படும் புத்தகங்கள் மாற்றுப்பத்திரிகைகள் முதலியவற்றைப்பற்றிய மதிப்புரை (19) கடின செய்யுட்களுக்குத் தெள்ளிய நல்லுரை (20) நன்மொழிகள் (21) சமாசாரக் கொத்து (22) இந்துதேசச் சரித்திரக் கதைகள் முதலிய பல விஷயங்களிற் பெரும்பான்மை வெளிவரும்.

7. தெய்வ பக்தி, பாஷாஞானம் தேசபக்தி ராஜபக்தி, நன்னடக்கை முதலியவற்றை இயன்றவாறு வளர்க்கத்தோன்றிய இப்பத்திரிகைக்கு, வடமொழி தென்மொழி ஆங்கிலம் கன்னடம் மலையாளம் ஹிந்தி முதலியன வல்ல தமிழறிஞர் விஷயங்கள் எழுதிவர ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

ஆதலின், எல்லாம் வல்ல ஈசன் தனது திருவருளாலும், தாய்மொழிக்குக் கண்யத்தை உண்டாக்கும் தக்கோர்கள் தம் மொழி, மெய், பொருள், அறிவு முதலியவற்றாலும், யாம் அரும்பெரும் பொருளைத் துரும்பென மதித்துப் பொதுநலங்கருதிச் செய்ய முற்பட்டுள்ள இந் நற்காரியத்தை இனிது நிறைவேற்றி யருள்வார்களாக. சகோதர பத்திராதிபர்களும் தம் பத்திரிகைகளை மாற்றுப் பத்திரிகைகளா அனுப்பியும், எம் பத்திரிகையைப்பற்றிய மதிப்புரையை வெளியிட்டும் எம்மை ஊக்கிக் கௌரவிப்பார்களாக.

உரிமையாசிரியர்.

பெஞ்சமின் பிராங்க்லின், Benjamin Franklin.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்"

பிறப்பும், இளமையும்.

இவ்வுலகத்தில், எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் ஒருவன் இருந்தாலும், மேன்மேலும் முயற்சியுடையோனும், கஷ்டம் வந்த இடத்தும் மனத் தளர்ச்சி அடையாமல் ஊக்கத்துடன் உழைத்து வருவோனுமிருப்பின், அவன் வெற்றிபெறுவது திண்ணம்.

பேஞ்சமின்பிராங்க்லின் என்பவரின் சரிதையைப் படிப்போர்க்கு இதன் உண்மை இனிது விளங்கும். இவரது பெற்றோர், இவர் பெருங்கல்வி பயிலுதற்கான உதவி எதும் செப்பச் சக்தியற்ற தரித்திரர்களாயிருந்தனர்; ஆதலின் பத்துவயது மட்டுமே இவரைப் பள்ளிக்கூடம் அனுப்பினர்கள். உலகத்தில் முன்னுக்கு வருவதற்கேற்ற பிறசாதனம் இவருக்கு ஒன்றுமே இல்லை. அங்ஙனம் இருந்தும், இவர், தம் விடா முயற்சியாலும், மேலும் மேலும் பயிலவேண்டுமெனக் கொண்ட பேரவாவாலும், கற்றுணர வேண்டியவற்றைக் கற்று, தாம் பிறந்த தேசமாகிய வட அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத்திற்கு எண்ணிறந்த நன்மை செய்து, உலகம் போற்றும் உத்தமராக விளங்கினர்.

இவர் **ஜோஸியா பிராங்க்லின்** என்பவரின் குமாரர். இவரது தந்தை 1685ம் வருஷம் இங்கிலாந்து தேசத்திலிருந்து புறப்பட்டுத் தம் மனைவியுடன் வட அமெரிகாவில் குடியேறி, 'போஸ்டன்' நகரில் தங்கி, மெழுகுவர்த்தி 'ஸோப்' முதலியன செய்து ஜீவனம் செய்துவந்தார். அங்கு இவரது முதல் மனைவி இறக்க, அவர் அபியாபால்கர் என்ற திடகாத்திரமுள்ள மற்றோர் மாதை மணந்தார். அந்த உத்தமிக்குப் பத்துக் குழந்தைகள் பிறந்தன. 1706ம் வருஷம் ஜனவரி-மீ 6வ பிறந்ததுதான் கடைசிக் குழந்தை. இக்குழந்தையே நம் பெஞ்சமின் பிராங்க்லின். குழந்தை யாதலின் இவரைப்பற்றி இப்பொழுது ஒருமையிலேயே பேசுவாம்:

'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கேற்பப் பெஞ்சமின் பிராங்க்லின் இளமையிலேயே தன் வகுப்பில் முதல்வனாக விளங்கினான். நீந்துவதில் அவனுக்குப் பிரியம் அதிகம். அக்காலத்தேயே தன் வயதுள்ள சிறுவர்களுக்கு, அவன், தானே தலைவனாக விளங்கினான். இச்சமயத்தில் நடந்த ஓர் சம்பவமானது பெஞ்சமினுக்கு

வெகு சிறு வயதிலேயே இருந்த பொதுநலப் பிரியத்தை நன்கு விளக்குகின்றது.

இவன் வீட்டுக்கருகில் ஒரு குட்டை இருந்தது. சேறும் சகதியும் நிரம்பியிருந்தது அதன் கரை. அந்தக் கரையில் நின்று குட்டையிலுள்ள மீன்களைப் பிடிப்பது அதிகக் கஷ்டமாய் இருந்தது. கால் சேற்றில் புதையுண்டு வருந்திய சிலரிடம் ஒருநாள் அவனுக்கு இரக்க முண்டாயிற்று. ஆதலின், பெஞ்சமின் எவரும் கஷ்டமின்றி மீன் பிடிப்பதற்கான ஓர் சூழ்ச்சியையும், முயற்சியையும் செய்யத் தீர்மானித்தான். எங்ஙனமெனில், அச் சதுப்பு நிலத்திலே தகட்டுக்கற்கள் பரப்பித் தரை இறுகுமாறு செய்விக்க எண்ணினன். இங்ஙனம் செய்தால் மீன் பிடிக்க வரும் யாவர்க்கும் நன்மை பயக்குமென்பது அவனெண்ணம். இந்த யோசனை நல்லது தான். ஆனால் கற்கள் வேண்டுமே? அதற்கொரு யுக்தி செய்தான். அச் சதுப்பு நிலத்தருகே வீடு கட்டுவதன் நிமித்தம் யாரோ கற்களைக் குவித்திருந்தார்கள். பெஞ்சமின் தன் தோழர்களுடன் சமயம்பார்த்துச் சென்று அக்கற்கள் ஒன்றுவிடாமல் கொண்டுவந்து இச் சதுப்பு நிலத்திற் போட்டுக் கரை யிறுகுமாறு செய்துவிட்டான். வீட்டுக்காரன் மறுநாட்காலை தன் கற்குவியலைக் காணாது மயங்கினன். பின்பு அவனுக்குச் சங்கதி தெரிந்தது. பையன் சிறுவனாதலின் அவனை ஏதும் செய்யாமல் அவனுடைய பிதாவிடம் சமாசாரத்தை தெரிவித்தான். பிதா பையனைக் கூப்பிட்டார். பிறகு இருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

தகப்பனார்: பெஞ்சமின்! நீ வர வர துஷ்டனாய்விட்டாய்.

பெஞ்சமின்: அப்பா! விஷயம் என்ன? நான் என்ன செய்தேன்?

தக: என்னவா? குட்டைக்குப் பக்கத்திலிருந்த கற்களை எல்லாம் சில பிள்ளைகளுடன் சேர்ந்து, நீ சதுப்புநிலத்தில் போட்டாயல்லவா?

பெஞ்: ஆமாம் அப்பா, நான்தான் எல்லோரையும் அப்படி செய்யும்படி சொன்னேன்.

தக: விஷயம் வாஸ்தவம்தானா? இதைவிட என்ன துஷ்டத்தனம் வேண்டும்? இது எவ்வளவு குற்றமான காரியம்!

பெ: இதில் என்ன குற்றம் அப்பா? சேற்றில் அனேகர் வழுக்கிவிழுந்தனர். சிலர் கால்கள் புதையுண்டு வருந்தினர். இவ்வாறு எவரும் வருந்தாதிருக்கத் தரை இறுகவேண்டுமென்று நாங்கள் கற்களைப் போட்டோம். இனிமேல் ஒருவரும் வழுக்கி விழமாட்டார் பாருங்கள்!

தக: மகனே! நீசொல்வது சரிதான். ஆயினும் கற்கள் யாருடையன? அதை யோசித்தாயா? உன்னுடையனவா? இவருடையதல்லவா?

இனமாகவா கிடைத்தவை அவை? பொருள் கொடுத்து வாங்கியவையல்லவா? இனமாகவே கிடைத்தவைகளாயிருப்பினும் உடையவருடைய அனுமதியின்றி அவற்றுள் ஒன்றையேனும் தொடல் நியாயமா? ஒருவருக்குத் தீங்கு செய்து அதனால் பிறருக்கு நன்மைசெய்ய முடியுமா?—உன்வீட்டுக் கற்களை வேறொருவன் கொண்டுபோனால் நீ சும்மா இருப்பாயா?

பே: அப்பா! இவைகளையெல்லாம் நான் யோசிக்கவில்லை. என்னை மன்னிக்கவேண்டும் இனிமேல் நான் இப்படிப்பட்ட தப்பிதம் செய்யமாட்டேன்'' இது நிற்க.

பெஞ்சமின் பிராங்க்லின் எட்டு வயதிலேயே வகுப்பில் முதல்வனாய் இருந்ததைப் பார்த்து அவன் பிதா, அவனை உயர்தரக் கல்வி பெறவும் முடிவில் சர்வ கலாசாலைக்கு அனுப்பவும் வேண்டுமென்ற அவா மிகுதியும் உடையவராய் இருந்தார். ஆனால் ஏற்கனவே கூறியபடி அவருடைய பெரிய குடும்பச் செலவும் கஷ்ட ஜீவனமும் இதற்குத் தடையாய் நின்றன. ஆதலின் அவனுக்குப் பத்து வயதானதும், பாவம்! அவன் படிப்பு நிறுத்தப்பட்டது. அவன் தகப்பனார் ஜீவனோபாயத்தின் பொருட்டுத் தாம் நடத்திவந்த கடையில் தமக்கு உதவியாளாக பெஞ்சமின் பிராங்க்லினை வைத்துக்கொண்டு விட்டார். ஆனால் படிப்பை நிறுத்திவிட அவனுக்கு இம்மியும் மனமில்லை. தாகத்தால் வருந்துவோர்க்குத் தண்ணீர்மேல் எவ்வளவு பிரியமோ, அவ்வளவு பிரியம் பிராங்க்லினுக்குப் புத்தகத்தின்மேலிருந்தது. தன் முயற்சியாலோ, அல்லது தந்தையின் அபிமானத்தாலோ தனக்குக் கிடைத்துவந்த அற்பப் பொருளையும் பத்திரமாக சேர்த்துவைத்துப் புத்தகங்கள் வாங்கி வாசிப்பான். தற்கால மாணவர் பலர் செலவழிப்பது போன்று, பயனில்லா வழியில் அரைக்காசும் அவன் செலவழியான்.

ஆங்கில பாஷா வல்லுநர் போற்றும் 'ஜான் பனியன்' என்பவரின் 'ரக்ஷண்ய யாத்திரிகம்' (Pilgrim's Progress) என்ற புத்தகத்தை அவன் பன்முறையும் படித்தான். 'நலஞ் செய்யுமாறு' என்ற ஆங்கில வியாச நூலையும் இளமையிலேயே படித்தான். அதிலிருந்த சில விஷயங்கள் இவன் மனதிற் பசுமரத்தாணிபோல் பதிந்தன. பரோபகார சிந்தனை தனக்கு உண்டானதற்குக் காரணம் இந்தப் புஸ்தகமே என்று அவனே தன் வயோதிக காலத்தில் சொல்லியிருக்கிறான். இவைபோல மற்றும் அனேக புஸ்தகங்களையும் படித்துப் பயன் மிகுதியும் அடைந்து வரலானான்.

(தொடரும்.)

P. சுந்தரராஜையங்கார், B.A.
சரித்திராசிரியர், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை.

* திருப்தி

என்னுடை மனமே எனக்கொரு ராஜ்யம்.
கைக்குமேல் இன்பம் காண்கின் றேன் அதில்.
இந்த இன்பம் இம்மா நிலந்தனில்
இயற்கை யானும் செயற்கை யானும்
அடையும் இன்பம் அனைத்தினும் மேலது.
பெரும்பா லார்கொள விரும்புவ அநேகம்
அடைந்திலேன் எனினும், அவைகளை நச்ச
எனது மனம்எனக் கிடந்தந் திலதே! (1)

அரசர்க் குரிய ஆடம் பரங்களும்
செல்வக் குவியலும் செயம்பெறச் சேனையும்
மனப்புண் ஆற்றும் மதிமிகு சூழ்ச்சியும்
காதல் நோக்கைஉண் காமர் வடிவமும்
ஆகிய எதற்கும் அடிமையா கேன்யான்.
ஏனெ என்னில், என்மன நிறைவால்
எய்தி யுளேன் யான் இவையா வையுமே. (2)

ஏகமா நிரம்பிய போக போக் கியங்களும்
பன்முறை தெவிட்டப் பார்த்திருக் கின்றேன்.
அதிவிரை வாய்உயர் பதவியிற் செல்வோர்
விரைவிற் கீழே வீழவும் கண்டுளேன்.
உயர்ந்த நிலைமை உற்றவர் பல்லோர்
ஊறுக ளால்அச் சுறவும் காண்கிறேன்.
அரிதின் முயன்(று)அவை அடைகின் றனர் அவர்.
பேராச் சத்துடன் பேணுவர் அவற்றை.
என்றும்இத் தகைக்கவல் என்மனக் கிலையே! (3)

மனநிறை வுடனே மன்னுநல் வாழ்வே
எனக்கா தரவென யான்கொண் டுளது.
வேண்டும் பொருட்குமேல் தேண்டுவ திலைநான்
அன்றியும் பிறர்மீ (து)அகங்கா ரத்துடன்
ஆணை செலுத்தும் ஆசையும் எனக்கிலை.
இல்லா ததனையும் ஈயும் என் மனம்காண்.

---

* இது ஆங்கில கவிஞரும் யாத்திரிகரும் ராஜதந்திர நிபுணருமான ஸர் எட்வர்ட் டையர் என்பவர் இயற்றிய 'Contentment' என்பதன் மொழி பெயர்ப்பு. இதன் செய்யுள் மூலம் வலக் கைப் புறம் பார்க்க. இவ்வருடத்திய S. S. L. C. மாணவர்களுக்குப் பயனுமாறு இது மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

திருப்தி

CONTENTMENT.

1 My mind to me a kingdom is;
Such present joys, therein I find
That it excels all other bliss
That earth affords, or grows by kind:
Though much I want which most would have,
Yet still my mind forbids to crave.

2. No princely pomp, no wealthy store,
No force to win the victory,
No wily wit to salve a sore
No shape to feed a loving eye;
To none of these I yield as thrall,
For why? my mind doth serve for all.

3 I see how plenty surfeits oft,
And hasty climbers soon do fall;
I see that those which are aloft
Mishap doth threaten most of all;
They get with toil, they keep with fear:
Such cares my mind could never bear.

4 Content to live, this is my stay;
I seek no more than may suffice;
I press to bear no haughty sway;
Look! what I lack my mind supplies.

குறிப்பு:—9 ஆவது செய்யுள் சிற்சில பதிப்பில் மட்டும் காணப்படுகிறது (8 ஆவது செய்யுளுக்குப் பதிலாக இச்செய்யுள் சில பதிப்புக்களில் உள்ளது.) இது S. S. L. C. பாடபுத்தகத்தில்இல்லாதது. ஆயினும் பொருளருமை கருதி இதுவும் மொழி பெயர்ப்புடன் பதிப்பிக்கப்பட்டுளது.

யான் இவ் விதமர் என்மனம் ஈவதை
ஏற்றுத் திருப்தி எய்திஓர் வேந்தனை
ஒத்தே வெற்றி உற்றுளேன் என்னே! (4)

அளவிற் கதிகம் அநேகருக் கிருந்தும்
மேலும் பெறஅவர் விருப்புறு கின்றனர்
என்னிடத் திருப்பதெல் லாம்சிறி தெனினும்
அதிகம் தேடும் ஆசை எனக்கிலை.
அதிகமே படைத்தும் அவர்கள்ஏ ழையரே.
சிறு பொருள் படைத்தும்யான் செல்வ வானே.
தரித்திர ரே அவர்; தனிகன் யானே.
ஏற்போர் அன்னோர்; ஈவோன் யானே.
வேண்டிநிற் போர் அவர்; விடுத்துநிற் போன்யான்.
வருந்துவோர் அன்னோர்; வாழ்பவன் யானே. (5)

ஒருவன் நஷ்டம் உறுவதை நோக்கி
ஏளனம் செய்யேன்; எவரெனும் ஊதியம்
எய்துழி யும்வயிற் றெரிச்சல் எனக்கிலை.
உலக பாச அலைத்திறன் எதற்கும்என்
மனத்தினை அலைக்கும் வல்லமை யின்று.
என் நிலை ஓர் அமை(வு)எய்திய தென்றும்.
பகைவருக் கஞ்சேன்; பரவேன் நண்பரை.
வாழ்வு வெறுத்திலேன். சாவும்அஞ் சேனே. (6)

ஐம்பொறி வாயிலா அடைசிற் றின்பமே
இன்பம் என்ன எண்ணுகின் றனர்சிலர்.
கடுகடுப் புடன்தாம் பிடிவா தத்துடன்
உரைப்பதே ஞானமென் றுன்னுகின் றனர் அவர்.
அவர்க்குச் செல்சார் அவரது பொருளே.
உறு‘புனை சுருட்(டு)’ அவர் திறமைக் களஞ்சியம்
எனினும் யான்காண் இன்பம் எல்லாம்
அமைவுறு மனத்துடன் அமர்ந்திருப் பதுவே (7)

அரோகமும் பூரண அநாயா சமுமே
எனது செல்வமா இருப்பன. எனக்(கு) என்
மாசிலா மனமே மாண்தடு படையாம்.
ஒருவர் உள்ளம் உவந்திடு மாறு
நான்கைக் கூலி நல்குவோன் அல்லன்.
மற்றும் ஒருவனை வஞ்சித் ததனால்
கோபத் திற்கிடம் கொடுப்பவ னும்அலன்.
இவ்வித மேயான் இருந்துவாழ் கின்றேன்.
இவ்வித மேயான் இறந்தி[illegible] திடுவேன்.
எனது விருப்பம் எனைப்போல் யாவரும்
யாண்டும் வாழ வேண்டு மென்பதுவே. (8)

Lo! thus I triumph like a king,
Content with that my mind doth bring.

5 Some have too much, yet still do crave;
I little have, and seek no more;
They are but poor, though much they have,
And I am rich with little store;
They poor, I rich; they beg, I give;
They lack, I leave; they pine, I live.

6 I laugh not at another's loss;
I grudge not at another's gain;
No wordly waves my mind can toss;
My state at one doth still remain:
I fear no foe, I fawn no friend;
I loathe not life, nor dread my end.

7 Some weigh their pleasure by their lust,
Their wisdom by their rage of will;
Their treasure is their only trust;
A cloaked craft their store of skill:
But all the pleasure that I find
Is to maintain a quiet mind.

8 My wealth is health and perfect ease,
My conscience clear, my choice defence;
I neither seek by bribes to please,
Nor by deceit to breed offence:
Thus do I live; thus will I die;
Would all did so as well as I!

*யாண்டும் என்மனத் திருக்கும் எதனையும்
மீண்டும் பெற்றிட விரும்புகி லேன்யான்.
உள்ளதற் கதிகமா உறயான் அலைகிலேன்.
சமநிலத் தேயே அமர்தல் என் விருப்பு.
எம்மலை மீதுமுற் றிருக்க யான் ஏறேன்.
கடும்புயல் அடித்திடும் காலந் தன்னிலும்
கடற்கரை மீ(து)உட்கார்ந்து கொண் டிருக்கிறேன்.
இழக்கவே நேரும் எதனையும் மீண்டும்
உற்றிட வீணே உழைத் துழைத்துழல் வோர்ப்
பார்த்(து) அன்னோரைப் பரிகசிக் கின்றேன்.
இச்சை எற்கிதுவே—இதற்குக் காரணம்
'அமைதிசால் மனத்தினும் அரும்பெருஞ் செல்வம்
மற்றிலை' எனயான் உற்றுணர்ந்ததுவே. (9)

ம. கோபாலகிருஷ்ணன்.

விநோதக் கூற்று.

"விலைக்கிக் கத்தி! விலைக்குக் கத்தி!! போனா வராது! போனா வராது!! —பன்னெண்டு சவாக்கத்தி - பதினஞ்சணா" என்று ஒருவன் தெருவில் கூவிக்கொண்டே போனான்.

சுப்பன்:—என்னப்பா அது?

கத்தி விற்பவன்:—சவாக்கத்தி— பன்னெண்டு—பதினஞ்சணா- அம்புட்டுத்தான் இருக்கு.

சுப்பன்:-(தனக்குள்) இந்தப் பய இதெ எங்கனுச்சும் திருடிக் கிருடித்தா னிருக்கணும். பின்னெ என்னமா இவ்வளவு மலிவாத் தாமுடியும்? ஆனா அதெப்பத்தி நமக்கென்ன கவலை? நமக்கோ கரடியாட்டமா, தாடி, மூக்கு, எல்லாம் மயிர் வளந்திருக்கு- மாசம் ஒண்ணிட்டுச் சரச்சுக்கிட்டாக் கூட, ஒரு வருஷத்துக்கு விசாரமில்லே. (வெளிப்படையாய்) சரி, அப்புறம் சொல்லு கண்டிப்பானவெலை. பன்னெண்டணாத்தான் குடுப்பேன்—சம்மதமா?

கத்தி விற்பவன்;—நீங்க கேக்கறபோது என்ன செய்யறது? பஞ்சத்துக்குப் புள்ளெயெ விக்கிறதுபோல விக்கிறேன். நாளியாச்சு. எடுங்க பணம்.

சுப்பன் வெகு சந்தோஷத்துடன் பணம் தந்து கத்திகளுடன் வீடுசென்று, 'ஷவா ஸோப்' ஒன்று வாங்கித் தாடி, காது, கண்ணெல்லாம், நுரைவரப்பூசி, சிரைக்கத் தொடங்கினான். கத்தி முழு மொட்டையாயிருந்தது. மற்ற கத்திகளையும் ஒவ்வொன்றாய் எடுத்துச் சிரைத்துப்பார்க்க, அவைகளும் அவ்வாறேயிருந்ததை அறிந்ததும்,

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கத்தில்.)

9 *I wish not what I have at will:
I wander not to seek for more:
I like the plain; I climb no hill:
In greatest storm I sit on shore,
And laugh at those that toil in vain,
To get what must be lost again.
This is my choice; for why?—I find
No wealth is like a quiet mind.

SIR EDWARD DYER.

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

அவனுக்கு வெகு கோபம் உண்டாய்விட்டது. உடனே அவன் ஒரே ஓட்டமாய் ஓடிக் கத்தி விற்பவனைக் தேடிச்சென்று கண்டு பிடித்து அவனை நோக்கி, "களவாணிப்பலே! அப்படியா சேதி? ஆரிடத்திலே ஒங் கைவரிசே? ஒரு மணி நேரமா வழிச்சு வழிச்சுப்பாத்து, கை அசந்து போச்சு. கிளிஞ்சலாவது சொறிஞ்சுக்க உபயோகப்படும். அதுக்குக்கூட உபயோகமில்லே ஒங் கத்தி. ஒண்ணுபோல எல்லாமும் அப்படியே இருக்கு. சரைக்காத கத்தியெ மெனக்கட்டுக் கொண்டுவந்துவித்துக் காசுவாங்கின ஒன் துணிச்சல் என்ன துணிச்சல்!" என்று அதட்டிக்கேட்டான்.

கத்தி விற்பவன்:—ஆரிட்டய்யா இந்தப் பொட்டெ மெறட்டு? ஞேசிச்சுப் பேசு. இது ரோக்கியனுக்குக்காலமில்லே—கத்தி சரைக்குமிண்டு நான் சொல்லியிருந்தா சோட்டைக் கயட்டிக்கிட்டு அடி. இல்லாட்டி—?

சுப்பன்:—பின்னே, சரைக்காதுன்னு வொனக்குத்தெரிஞ்சிருக்கிறபோது அதை எதுக்கடா கொண்டுவந்தே நாப்பலே?

கத்தி விற்பன்:—எதுக்கா? விக்க ஐயா, விக்க—இது விக்கர கத்தி—சரைக்கர கத்தி இல்லை.

சுப்பன்:—இது தெரிஞ்சிருந்தா வாங்கியேயிருக்க மாட்டேனே!

கத்தி விற்போன்:—'விலைக்கிக் கத்தி! விலைக்கிக் கத்தி!!' இண்டது காதுலே விளல்லியோ? சரைக்கர கத்தி இன்னுமில்லே மலுவாயிருக்கும்? இன்னும் அதிகமாகவும் கிடைக்கும்! நீ குடுத்த கொள்ளைக்குக் "கூகூ" இங்கத்தான் வேணும்—ஆராவது கேட்டாச் சிரிக்கப் போராங்க—போ பே!

து, அண்ணுசாமி ஐயர், கூத்தூர்.

உ

பராந்தகன்.

முதற் காட்சி.

காலம்:—முன்னிரவு.

இடம்:—மதுரை: வைகைநதியைச் சார்ந்த மரமடர்ந்த சாலை.

பாத்திரங்கள்:—பரமானந்தப் பரதேசி, தனபாலன், கறுப்பன்:

பரதேசி:—வழியோ தொலையவில்லை. இரவும் இருண்டு விட்டது. என்ன செய்வேன்! என்கதி இவ்வாறுமென நான் கனவிலும் கருதவில்லையே! இவ்வாறு நாயினுங் கேடாக நான் எத்தனை நாள் வயிறு வளர்ப்பேன்! [பாடுகிறான்.]

$ "உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலில்லை
உண்ணவோ உணவுக்கும் வழியில்லை.
படுக்கவோ பழம் பாய்க்கும் கதிஇல்லை.
பாரில் நல்லவர் பாற்சென்று பிச்சைதான்
எடுக்கவோ திடம் இல்லை. என் பால் உனக்
கிரக்கம் என்பதும் இல்லை. உயிரைத்தான்
விடுக்கவோ மனம் இல்லை, என்செய்குவேன்!
வெண்பிறைச் சடை வித்தக வள்ளலே!"

ஆ! என்ன இருட்டு!

[நான்கு பக்கமும் அண்ணார்ந்து பார்க்கிறான்]

வெகு தொலையில் அதோ ஒரு சிறுவெளிச்சம் தெரிகிறதே. ஊர் ஏதேனும் அருகில் உள்ளதோ?—ஆ! ஆ!! வெளிச்சம் சிறிதாயிருந்தாலும் எவ்வளவு தொலையிலிருந்து தெரிகிறது! இச் சிற்றொளிபோன்றே, நற்செய்கைகளும் எவ்வளவு சிறிதாயிருப்பினும் அதிதொலையினும் சோபிக்கும்—ஒருவேளை நான் காண்பது கொள்ளிவாய்ப் பேயாய் இருக்குமோ? ஆ! என்னகஷ்டம்! என்ன கஷ்டம்!!

§ "ஏதும் தெரியா (து) எனைமறைத்த வல்லிருளை
நாத! நீ நீக்கஒரு ஞானவிளக் கில்லையோ?

$ திருவருட்பா.

§ தாயுமான ஸ்வாமிகள்.

அதோ மணிச்சத்தம் கேட்கிறது. கோவில்மணியே அது. ஆதலின் வெளிச்சமும் கோபுரவிளக்கின் ஒளியே. அர்த்தஜாம தீபாராதனை நடைபெறுகின்றதுபோலும்! 'ஹர ! ஹர ! ஹர !'

[கன்னத்தில் அடித்துக்கொள்ளுகிறான்.]

சரிதான். அடுத்தவூர் 'மதுரை' என்றார்களே, அதுதானோஇது?

[பாடுகிறான்.]

* "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயக் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே."

[கைகூப்பித்தொழுகிறான்.]

முன்பின் தெரியாத இவ்வூரில் இந் நள்ளிருளில் எங்குத்தங்குவேன்! செல்வச் சீமான்கள், இச்சமயம், தம்

† "மணமிக ஊட்டிய மாளிகைக்கண்ணே
விலைமதித் திடவொணு விதானத் தின்கீழ்
இன்னிசைக் கீதம் இசைத்திடத் துயில்வர்"

பாம ஏழைகளோ, தங்கள்

† "அதிபுகை மண்டிடும் அற்பக் குடிசையில்
மெய்யெலாம் வருத்தும் வெய்யபுன் பாயலில்
செவிக்கண் கொசுகினம் சில்தா ராட்டிட
அடங்கி முடங்கிக் கிடந்து தூங்குவர்"

நானோ, அந்தோ ! அநாதைபோல் இந் நிலையிலிருந்து வருந்துகின்றேன். ஐயோ! கொழுந்துவிட்டெரியும் பசித்தழலை எவ்வாறு அவிப்பேன் !

§"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?

---

* திருஞான சம்பந்த சுவாமிகள்.

† அரும்பொருட்டிரட்டு. § தனிப்பாடற்றிரட்டு.

அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான்? அந்தோ! என்றும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே!"

போகின்ற தென்னுயிர்! இப்பொழுது எனக்கு இணையிலா ஆஸ்தியாய் இருப்பது (உடைவாளை உருவிக் கையிலேந்தி) இக்கத்தி ஒன்றே. உயிரையே பெரிதென மதிப்பேனாயின்—நாளை வரை என்ஜீவன் இருக்குமானால்—இதனைநான் விற்றுத்தீர வேண்டியவனே.—சீ! இஃதென்ன பைத்தியம்! ஏது எனக்கு இவ்வாறு புத்திபோயிற்று?. (வாளை நோக்கி) ஆப்தநண்ப! நீ எனது இணைபிரியாச் சிநேகன். என் வெகுநாளைத்தோழன். துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டு எந்தையாற் கொடுபட்டவன். அவரது நல்லெண்ணம் நிறைவேறும் பொருட்டும், அவரது ஞாபகார்த்தமாகவுமன்றோ நான் உன்னை வைத்திருக்கின்றேன்? எனது உயிர் பிரியுமளவும் உன்னைப்பிரியேன். இது சத்தியம்.—ஆ! இஃதென்ன! மனிதரது காலடிச்சத்தம் கேட்கிறது

[கறுப்பன் வருகிறான்.]

ஏழைக்கிரங்கியாகிய சர்வேசன் என் ஆபத்துக்காலத்தில் உதவி செய்வதற்கே அதோ வருகிறவனை இவ்அகாலத்தில் இங்கு அனுப்பியுள்ளான் போலும். ஆனால்,

* "பல்லெலாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லிகாட்டித் தனைக்கரம்விரித் தநீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி
'இல்' என இரத்தல் அந்தோ! இழிவிழி வெந்த ஞான்றும்"

ஆயினும்,

† "மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்பர். ஆதலின் வருகிறவனை யாசிப்பதில் தவறுஎன்ன? பசிக்கொடுமையால் கொலை களவுமுதலிய ஈனத்தொழில் புரிவதினும் இரப்பது எத்தனை மேன்மை!—இரப்பதினும் இறப்பது மேன்

* குசேலோபாக்யானம். † தனிப்பாடல்.

மைதான். ஆயினும் எக்காரணம்பற்றிக் கடவுள் என்னை உயிடன் வைத்திருக்க எண்ணியுள்ளாரோ? ஆதலால் வலிதிற் சாகத் துணியேன்.—இஃதென்ன? வருகிறவன் கால் தலை தோற்றாது நீண்டதோர் உடையால் தன்னை மறைத்துக்கொண்டு வருகிறான்? இப்படியும் ஒரு பைத்தியக்காரன் உண்டோ!

[கறுப்பன் திடீரென அதிவிரைவில் ஒரு மரத்தண்டை ஒதுங்கி மறைகிறான்.]

ஈதென்ன ஆச்சரியம்! வந்துகொண்டிருந்தவன் திடீரென மறைகிறான். காரணம் யாதாயிருக்கலாம்?—

[தனபாலன் வருகிறான்.]

அதோ அங்கு வேறொருவன் வருகிறான். இவன் வரவும் அவன் மறைவானேன்? மற்றும், மறைந்தவன் அடிமேல் அடிவைத்து முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டு நடந்து வருவதைப்பார்த்தால் சந்தேகத்திற் கிடமாகவே இருக்கிறது. ஏதோ கிருத்திரமம் நடக்கும்போலிருக்கிறது. கள்ளனுக்குள் குள்ளன் பாய்வது போல், மறைந்தவன் பிறகே, அவன் அறியாவண்ணம், இம் மரத்தின் புறத்துநின்று கவனிக்கிறேன்.

[கறுப்பனுக்குப் பின் பரதேசி அவனறியாமற்போய் நிற்கிறான். தனபாலன் கறுப்பன் முன் நின்ற இடத்தைத் தாண்டிச் செல்லவும், கறுப்பன் வெளிப்பட்டுத் தனபாலனைக் கொல்ல அதிதீவிரமாகக் கத்தியை ஓச்சுகிறான். இதனைக் கண்ட பரதேசி கத்தியையும் அவன் கால்களையும் தட்டிவிட, கொலைஞன் குப்புறவிழுந்து தலைக் காயத்துடன் 'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓட்டமெடுக்கிறான்.]

தனபாலன்:—(திடுக்கிட்டுப் பரதேசியை நோக்கி) என்ன விசேஷம்? நீ யார்?

பரதேசி:—விசேஷம் ஒன்றுமில்லை. என்னுடைய பல விளையாடல்களில் இஃதொன்று: உம்மைக்கொல்லவந்த மிருத்தியு தேவதையை ஓட்டினேன். அவ்வளவுதான். நான் கேவலம் பரதேசி. ஆயினும் உமது உயிரைக் காக்கும் பாக்கியம் எனக்கு இன்று இருந்தது.

தன:—(சமாளித்துக்கொண்டு) ஏன் வீண் புரளி? என்னையாவது, நீ காக்கவாவது? எப்படி?

பர:—எப்படியா? இப்பொழுது ஓட்டம்பிடித்த உத்தமன் உமது வருகையை எதிர்பார்த்திருந்தவன் போலும். ஏனெனில், உமக்கு முன்னால் வந்துகொண்டிருந்தவன் உம்மைக்கண்டதும், பூனை போல் இம் மரத்தருகே பதுங்கினான். பதுங்கியவன், நீர் முன் வந்ததும், இம்மரத்தடியினின்று வெளிப்பட்டு உமது உயிர்க்கு உலைவைக்க இருந்தான். மயிரிழை தப்பினீர். நான்மட்டும் அச்சமயம் இருந்திராவிடில் உமது பிராணன் போயேயிருக்கும்.—இவ்வளவு உபகாரம் செய்த எனக்கு நீர் ஓர் உதவி செய்யக் கூடாதா?

தன:—அடி செருப்பாலே. உங்கள் யோக்கியதை எனக்கு நன்றாகத் தெரியுமே. நீயும் அவனும் கூட்டுக்களவாணிகள் அல்லீரோ? நல்லவன்போன்று நீ நடித்தால் நான் நம்பிவிடுவேனோ? நான் ஏமாந்தபேர்வழி என்றெண்ணி விட்டாய் போலும்!. என் பணத்தைப் பறிக்க என்ன யுச்தி! என்ன யுக்தி!! தனபாலனிடமா அது பலிக்கும்? பிச்சைக்காரப் பயலே—

பர:—(பிரமித்து) ஐய! நான் பரம ஏழையேயாயினும் நீர் நினைத்துக் கூறுகிறபடி அயோக்கியனல்லேன். வாய்க்கு வந்தவாறு பேசாதீர் தயை செய்து.

* "யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பதை ஞாபகத்திருத்தும். ஈகைதான் உமக்கு அரிதாய்விட்டது. நீர் 'இன்சொலினும் நல்கூர்தல்' ஏனோ?—நான் உம்மிடம் ஏதோ பிரமாதமாகக் கேட்டு விடப்போகிறேன் என்று அஞ்சாதீர். எனக்கு வேண்டியதெல்லாம் இவ்வளவு சோறே.

தன:—என்ன! என்ன!! சோறா? கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணிமோர் குருதக்ஷிணையா? உன்னை உன் அயோக்கியத்தனத்திற்குத் தண்டியாமல் இருக்கிறேனே, அது போதாது? சோறுமா வேண்டும்? பேஷ்! பேஷ்!! உன்னைச் சும்மாவிடுவது தவறு. மரியாதையாய்ச் செல்லுகிறாயா? அல்லது இக் குழல்

*திருக்குறள்.

கொண்டு ஊதிப் பக்கத்திலுள்ள கொத்தவால்சாவடியி (போலீஷ் ஸ்டேஷ) னின்று காவலாட்களை வரவழைத்து உன்னைக் கட்டியிழுத்துச்செல்ல ஏற்பாடு செய்யவேண்டுமா?

[வாயில் குழல்வைத்து ஊதப் போகிருன்.]

பர:—(குழலைப்பறித்துக் கையில் வைத்துக்கொண்டு) ஊதுங்காணும்; ஊதும். என்னென்னவோ பிரமாதப்படுத்தினீரே. ஏன் வாய் திறவா திருக்கிறீர்?—இருக்கட்டும். நான் திருடினேனு, அல்லது கொலை செய்தேனு, இவ்வாறெல்லாம் பயமுறுத்த?– உம்மைச் சொல்வதிற் பயனில்லை. காலம் இவ்வாறு போய்விட்டது—அப்படியா?—அதுகிடக்கிறது. என்னை இஷ்டப்படி எதுவும்செய்து கொள்ளும். இப்பொழுது எனக்குப் பசி மிகுதி. என்னைப் படைத்த இறைவன்மேல் ஆணை. நான் சொல்வது சத்தியம். பல தினங்களாக நான் 'பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் உழந்து' அலைகின்றேன். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'. இவ்வளவு சோறுபெறஏதேனும் உத்தரவானுற் போதும். உமக்கு எவ்வளவோ புண்ணியமுண்டு.

தன:—நீ போகமாட்டாய்? புண்ணியமா?—மகா புண்ணியத்தையும் பாபத்தையும் கண்டவன் நீ.

[தன் சட்டைப்பையிலிருந்த கைத்துப்பாக்கியை மறைத் தெடுத்து வைத்துக்கொண்டு]

பொய்சொல்லும் வாய்க்குப் போசனமேது? உன்னுடன் வந்தவன்யார்? அதனைத் தெரிவித்தாயோ பிழைத்தாய்?

பர:—ஹ்ம்—இல்லாவிடில்?

தன:—தெரிகிறது பின்பு.

பர:—'பின்பு' என்ருல்?

தன:—ஏது நீ பெரும் போக்கிலியா யிருக்கிருய்? வந்தவன் யார்? சொல்லமாட்டாய் நீ?

பர:—ஐய! ஏனோ இந்த உருட்டு மிரட்டுக்கள்? அறிந்திருந்தால் அவசியம் நீர் கேட்காமல் இருக்கும்போதே அவனைப்பற்றி அறிவித்திருப்பேனே. வந்தவன் யாரோ, சத்தியமாய் அறியேன். ஆயினும் நான் உமது உயிரைக் காப்பாற்றியதுமட்டும் உண்மை. அது முழுப்பொய் என்றே நீர் கொண்டாலும், பசிப்பிணியால்

வருந்தும் பரதேசிக்கு நீர் பரிவுகூரலாகாதா? மிக்க பசி. இரண்டணாக்காசேனும்—

தன:—(வெகுண்டு) இந்தக் கதையெல்லாம் யாரிடம்? வந்தவழியைப் பார்த்துக்கொண்டு மரியாதையாய்ச் செல்லுகிறாயா? சாகிறாயா? ஒரு காசுகூட நீ பெறமுடியாது.

பர:—முடியாதா? ஆ! கடவுளே! நான் செய்யும் உபகாரம் இவ்வாறு போகவேண்டும்! ஐய! உமது உயிர் இரண்டணாக்காசு கூடப் பெறாதா? உமக்குச் சற்றும் கருணையில்லையா? இலவசமாகத்தர உமக்கு இஷ்டமில்லையேல், கடனாகவாவது தாரும். பிறகு என்யோக்கியதையைப் பாரும் அதிகமில்லை: இரண்டே அணா—

தன:—(அச்சமேலிட்டவனாய்) நீ சும்மா போகமாட்டாய்? நீ என்ன அதிகப் பிரசங்கியாய் இருக்கிறாய்? உயிருடன் திரும்ப உனக்கு மனமில்லைபோலும். இனி நீ வாயைத்திறந்தால் உன் கதி அதோகதிதான்.

[பரசேசியின் கந்தை உடையில் தெரிந்த உடைவாளைக் கண்டு நடுங்கி]

அடா துரோகி! கொலைகாரா! கத்தியிருக்கும் தைரியமா உன்னை இவ்வாறெல்லாம் பேசச்சொல்லுகிறது? நீ இப்பொழுதே சாக வேண்டியவன்தான்.

[பரதேசியை நோக்கிச் சுடுகிறான். பரதேசி அத் துப்பாக்கியை அதி சாதுரியமாகத் தட்டிவிட்டு அதனைக் கைக் கொண்டதுடன் ஓடின அவனைப்பிடித்து நிறுத்துகிறான்]

பர:—இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? பசிக்கொடுமையால் துடிதுடிக்கும் எனக்கு இரண்டணா தர உனக்கு மனமில்லாமற் போய்விட்டதே. உனது உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் நம்முடையவனவாக்கிக் கொண்டுவிட்டோம் பார். கோவணம் ஒன்று நீங்கலாக எல்லாவற்றையும் இக்கணமே நம் பாதகாணிக்கையாச் சமர்ப்பித்து நம் உத்திரவை எதிர்பார்த்து நில்.

தன:—(நடு நடுங்கி) ஐய! ஐய! எல்லாவற்றையும் தந்துவிடுகிறேன். என்னை உயிருடன் மட்டும் விட்டு விடும்.

[ஜரிகை வேஷ்டி, வைர நகைகள், கைக்கடியாரம், பொன்சங்கிலி,

பணமுடிச்சு, கோட்டுக்கள், எல்லாவற்றையும் பரதேசியின் பாதத்தடியில்வைத்து விழுகிறான்.]

பர:—(தனக்குள்) அதுதான் சரி. வெளுப்பானுக்கு வெளுப்பான் ஜாதிவண்ணுன். (வெளிப்படையாய்) உன் உண்மையான விலாசம் என்ன? பொய் சொன்னுயோ, போயிற்று உன்னுயிர். ஞாபகமிருக்கட்டும்.

[தனபாலன் தன் உண்மை விலாசம் தருகிறுன்.]

சரி. உன் நடத்தையை இந்த நிமிஷம் முதல் கவனித்து வருவோம். ஜாக்ரதை. தீக்குணம் இனிச் சிறிதேனும் உன்னிடம் இருக்கக் கண்டோமோ, நீ எங்கிருந்தாலும் தொலைந்தாய். போ இனி. நம் ஞாபகமிருக்கட்டும்.

[தனபாலன் செல்லுகிறுன், பரதேசி அகரகர்க்குப் போகிறுன்.]

[முதற் காட்சி முற்றுப் பெற்றது.]

திருக்குடந்தை:—ஆயக்கண்ணனுர்.

தமிழ்த்தாய்த் திருத் தசாங்கம்.

1. பேர்.

தாரணியி லென்றென் றுந் தங்கிவிளை யாடுகின்ற
பூரணியின் 'பேர்'உரையாய் பூவாய்நீ!—ஆரணியும்
அன்பர் பணிந்தேத்தும் ஆநந்த வல்லியுமாம்
இன்பத் 'தமிழ்த்தாயே' என்று.

2. நாடு.

இயம்பு வனஇயம்பி இன்பளிக்குங் கிள்ளாய்!
நயம்பெறவள் 'நாடு' நவில்வாய்— வயங்கிமிளிர்
'வேங்கடமா வெற்புமுதல் மேவு கன்னி யாகுமரி'
தாங்கிடுமோ நாடாகும் தான்.

3. நகர்.

பொற்றெடியார் போற்றுகின்ற பொற்கிளியே! பைந்தமிழாம்
நற்றுய் 'நகர்' நீ நடத்துரையாய்—வெற்றிக்
குதிரைப் படைகொணர்ந்த கொற்றவன்றன் கூடல்
'மதுரைப் பதி'யாம் மதி

4. ஆறு

அன்பூட்டும் நற்றமிழ்த்தாய் 'ஆறு'தனை ஐயமற
இன்பூட்டுங் கிள்ளாய்! இயம்புவாய்—என்பும்
கரைந்துருகப் பாடுங் கவுணியர்கோன் ஏடு
விரைந்தெதிர்செல் 'வையை' விளம்பு.

5. மலை

தலைவன் தலைவி தமக்கிடையே தூது
செலுங்கிளி!நற் ருப் 'வெற்புச்' செப்பாய்—கலைத்தமிழும்
சந்தகமழ் மாருதமும் சார்ந்துமணம் உந்துமுயர்
சந்தப் 'பொதியம்' எனத் தான்.

6. ஊர்தி.

உலகுபுகழ் தண்டமிழ்த்தாய் 'ஊர்தி'யிது என்ன
இலகுமொழிக் கிள்ளாய்! இயம்பாய்—நலமிகுந்த
சொற்றிறனல், கோதிலாத் தூய நடையால் ஆன்ற
'கற்றறிந்தோர் நா'வதுவே காண்.

7. படை.

பகைவர்தமை வென்றஅப் பண்புடையாள் சொள்ளுந்
தகு 'படை'யா (து?) ஓதுகநீ தத்தாய்!—புகழாற்
''சிறந்தாசு வித்தார சித்ர மதுரம்
நிறைந்தகவி'' ஆகும் நினை.

8. முரசு.

ஆனந்தம் யார்க்கும் அளிக்குந்தா யின்'முரசம்'
கானமொழிக் கிள்ளாய்! கழறுவாய்—தேனேர்
''இயலும் இசையும் எழில்நா டகமும்''
வயங்கொள் முரசாகும் மற்று.

9. தார்.

மங்கையர்கள் கையில் மகிழ்ந்திருக்கும் வண்கிளியே!
கொங்கவிழும் அன்னையின்'தார்' கூறுதிநீ—பொங்கியொளிர்
பூவாரத் தும், பொலியும் பூணுரத் துஞ்சிறந்த
'தேவாரப் பாவாரம்' தேர்.

10. கோடி.

அன்னைபுகழ் நாட்டும் அணி'கோடி'தான் ஓதுவாய்
இன்னமுத நேர்சொல் இளங்கிளியே!—தங்கிகரில்
நற்றகைய முத்தமிழின் நாற்கவியுந் நாட்டுபுகழ்க்
கொற்றப் 'புலமை'க் கொடி.

இலங்கைதபடி,

R. S. சாம்பசிவ சர்மன்.

ஆசிரியரும் மாணாக்கரும்.

முன்னுரை

அரிய மனிதப் பிறப்பை யடைந்திருப்பவர்கள் தாம் தாம் பிறந்த தேசத்தானும், பேசும் மொழியானும், பிறவற்றானும், வேறு வேறு வேறு கூட்டத்தவராகப் பகுக்கப் படுகின்றனர். அக் கூட்டத்தவருள்ளும், தம் தம் அறிவு தொழில் முதலியவைகளாற் சிறப்பு மேம்பாடுற்று, அவ்வச் சிறப்பிற்கும், அவை நிகழும் அவசரத்திற்கும் தக்கவாறு பல்வேறு, சிறப்புப் பெயர்களால் வழங்கப் படுபவர் உண்டு. பல கலைகளையும் கற்றுணர்ந்தவர்களாய்த் தாம் அறிந்தவைகளைப் பிறரும் அறிந்து பயனெய்துமாறு அருள் சுரந்தூட்டுபவர்கள், "ஆசிரியர்" என்னும் சிறப்புப்பெயர்க்கு உரியராகின்றனர். அவர்கள், தாம் அறிந்தவைகளை நூல் இயற்றுதலானும், உரை எழுதுதலானும், நேரிற் போதித்தலானும், பிறர்க்கு உரிமைப்படுத்தி, முறையே 'நூலாசிரியர்', 'உரையாசிரியர்' 'போதகாசிரியர்' என்னும் பெயர்க்கு உரியராகின்றனர். "நூல் உரை போதகாசிரியர் மூவரும்" என்பது இலக்கணக் கொத்து. இவர்களன்றி, உலகில் தீவினை தலையெடுக்குங் காலங்களிற் றோன்றி, அதனை அழித்துத் தருமத்தை நிலைநிறுத்துவோர்களும், சமயஸ்தாபனஞ் செய்து ஆன்மஞானம் அல்லது பதி ஞானத்தைப் பரவச் செய்வோர்களும், தனித்தனி ஆன்மாக்களின் பரிபாக காலத்தில் வெளிப்பட்டுத் தீக்ஷையானும் உபதேசத்தானும் ஆன்ம சுத்தியையும் ஆன்ம லாபத்தையும் அருளுவோர்களும் கடவுட் டன்மை வாய்ந்த 'ஆசிரிய'ராகின்றனர்.

ஆசிரியர்.

முற்கூறிய பல்வகை ஆசிரியர்களுக்குள் ஆசிரியரென யாம் இங்குக் கருதியது போதகாசிரியரையே. நெடுங்கணக்குமுதல், பெருங்கலைகள்வரை எப்பாடத்தையும் ஒவ்வொருவர்க்கேனும், ஒவ்வொரு தொகுதியாயுள்ளவர்க்கேனும் போதிப்பவரெவரும், போதகாசிரியர்களே. இவர்கள் 'உபாத்தியாயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றனர். 'ஓதுவித்தற்கண் உதவியாயுள்ளவர்கள்' என்னும் பொருள்படும் 'உப-அத்தியயனர்' என்னுந் தொடர், சொல்லும் பொருளும் சிறிது திரிந்து, 'உபாத்தியாயர், உவாத்தியார்' என வழங்குகிறது.

பரத கண்டத்தவராகிய நம் முன்னோர்கள், கல்வியே மக்களுக்குக் கண்ணெனக் கருதிப் போற்றி வந்துளார்கள். குழந்தைகட்கு மிக்க இளம்பிராயத்தில் வித்யாரம்பஞ் செய்வித்தலை இன்றியமையாத ஒரு சடங்காகவும் நம்மவர் கொண்டிருக்கினரன்றோ! 'இளமையிற்கல்,' 'வித்தைவிரும்பு!' 'எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்' என்பன போல்வன நம்நாட்டு மூதுரைகளாகும்,

இத் தமிழ்நாட்டில் மிகப் பழங்காலந்தொட்டே சிறு பள்ளிக்கூடங்களும், பெரிய கலாசாலைகளும், கல்விச் சங்கங்களும் இருந்திருக்கின்றன. அக்காலத்தில் உபாத்தியாயர், 'கணக்காயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டனர். 'கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால்,' என்பது நாலடியார். சங்கப்புலவர்களுள் பலராலும் அறியப்படும் பெருமை வாய்ந்த 'நக்கீரனார்'க்குத் தந்தையானவர் மதுரையிலிருந்த ஓர் உபாத்தியாயரான காரணத்தால், 'மதுரைக் கணக்காயனார்' என வழங்கப்பட்டார். மணிமேகலைக்காப்பியத்தால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், காவிரிப்பூம்பட்டினத்தில் வித்தியாமண்டபம் முதலியன இருந்தமை புலனாகின்றது. பாண்டி நாட்டில் ஆயிரக்கணக்கான வருடங்கள் சங்கமிருந்து தமிழை வளர்த்தது உலகப்பிரசித்தம். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், தமது இராமாயணத்தில் கோசலநாட்டை வருணிக்குமிடத்து

"பந்தினை இளையவர் பயில்இடம், மயிலூர்
கந்தனை அனையவர் கலைதெரி கழகம்"

என்று கூறியது, அந்நாட்டிற்கும் பொருந்துவதாயினும், தமிழகத்தின் ஞாபகத்தால் அங்ஙனம் கூறினாரெனக் கொள்ளலும் தவறாகாது. இதனால் தக்க பருவம் வரப்பெற்ற வாலிபர்கள் சிறந்த கலைகளைப் பயின்றுவந்த கலாசாலைகள் இப்பரத பூமியில் அக்காலத்திலிருந்தமை புலனாகின்றது. பல சொல்லியென்? அயோத்தியானது 'கல்வியாகிய ஒரே முளை முளைத்தெழுந்து, கேள்விகளாகிய கவடுகளைப்போக்கி, தவமாகிய சாகந்தழைத்து, அன்பாகிய அரும்பு அரும்பி, தருமமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய பழம் பழுத்தது போலும்' என்பரேல், அக்காலத்துக் கல்வியானது எவ்வளவு மகோன்னத நிலையில் இருந்திருத்தல் வேண்டும்?

பழைய தமிழ் நூல்களில் முகவுரையாக உபாத்தியாயரியல்பும் அவர் பாடம் போதிக்கும் முறைமையும், மாணாக்கரியல்பும், அவர் பாடங் கேட்கும் முறையும், விளக்கமுற எழுதப்பட்டு வந்திருக்கின்றன. இந் நான்கிலக்கணமும் சேர்ந்த முகவுரையானது, 'பொதுப்பாயிரம்' எனப்படும். நன்னூலாசிரியர், நூலின் இலக்கணத்தையும் பொதுப்பாயிரத்திற் சேர்த்திருக்கிறார். அவரும் அவர்க்கு முன்னாகப் பின்னாக வுள்ளவர்களும் கூறியிருக்கும் "ஆசிரியர்—மாணாக்கரியல்பு" களைப் படிக்குங்கால், எல்லையில்லாத வியப்பும் உவப்பும் நமக்கு உண்டாகும். நன்னூலாசிரியர், 'நற்குடிப்பிறப்பு, சீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பலநூல்களையும் கற்றுத்தேர்ந்த அறிவின் தெளிவு, போதனாசக்தி, உலகியலறிவு முதலாகிய உயர் குணங்களை உடையனாதலோடு, பொறை முதலியவற்றால் புவியினையும், உயர்ச்சி முதலியவற்றால் மலையினையும், நடுவுநிலை முதலியவற்றால் நிறைகோலையும், முகமலர்ச்சி முதலியவற்றால் மலரினையும், ஒத்து விளங்குபவனே ஆசிரியனாவான்' என்று கூறுகின்றார்.

புறத்திணையியலில் 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்' என்பதற்கு, நச்சினார்க்கினியர் காட்டியுள்ள ஓர் செய்யுளானது, ஐயன் ஆரிதனார் கூறிய அவையமாந்த ரிலக்கணத்தோடும், ஆத்திரேயன் பேராசிரியன் கூறிய ஆசிரிய இலக்கணத்தோடும், கருத்தொருமையுற்று, அழகுபெற உருவகஞ் செய்யப்பட்டு, விளங்குகிறது. அதன் அர்த்தத்தை இங்குக் கூறுகின்றேன். "குடிப்பிறப்பாகிய உடையை யுடுத்து, நூலுணர்வாகிய மலரைச் சூடி, நல்லொழுக்கமாகிய அணியைப்பூண்டு, சத்தியமாகிய உணவையுண்டு, தூய்மையாகிய ஆதனத்தமர்ந்து, நடுவுநிலையாகிய நகரிற்றங்கி, அழுக்காறின்மை அவாவின்மை யென்கிற இரு பெரு நிதியத்தையும் மேன்மேலும் ஈட்டுகின்ற தோலா நாவினையுடைய மேலோரின் பேரவைக்கண் ஒருநாள் சேர்ந்திருத்தல் கிட்டுமாயின்,—யான் மகிழ்வுடன் பெறுவேனாக, புலவு நாறுவதாய் நிலையற்றதாயுள்ள யாக்கையுடன் பொருந்தி, உலகின் கட்சுழலாநின்ற இப்பிறவியினை."

இவற்றானெல்லாம், ஆசிரியரென்போர், பண்டமாற்றுச்செய்யும் வணிகரையும், தாம் பெறும் சம்பளத்திற் கேற்ப வேலை செய்யும் கூலித் தொழிலாளர் அல்லது உத்தியோகஸ்தரையும் போன்றவரல்லரென்பதும், புனித சிந்தையும் புனித வொழுக்கத்தையுமுடையராய்த் தம்மைச் சார்ந்தாரை யெல்லாம் புனிதராக்கி வாழ்விக்கும் பேரருளாளர் என்பதும் விளக்கமாகின்றன.

இனி, ஆசிரியராவார் பன்னூலுங் கற்றிருந்தவராதலோடு உலகத்தோடு பொருந்த நடத்தலிலும் வல்லவராதல் வேண்டும். தாம் கற்றுணர்ந்த அரும் பொருள்களைப் பிறர் எளிதினுணருமாறு போதிக்குந் திறனுடையராதல் வேண்டும்; இன்றேல், அவர் கொம்பினிடத்து நன்றாகப் பூத்திருந்தும் மணம் வீசுதலில்லாத புஷ்பத்தினையொப்பரெனச் செந்நாப்போதார் கூறுகின்றார். ஆசிரியன் பாடங் கற்பிக்குங்கால் தான் கற்பிக்கப் போகும் விஷயங்களை மனத்திலமைத்துக்கொண்டு, விரையாமலும், வெகுளாமலும், பிரியத்துடனும், முகமலர்ச்சியுடனும் கற்பித்தல் வேண்டும். தம்முடைய தெளிவும் இனிமையும் பொருந்திய குற்றமற்ற சொற்களினால் மாணாக்கர்களை வசிகரித்து, அவர்களுக்கு 'மேலும்மேலும் கேட்கவேண்டு'மென்னும் ஆர்வத்தையும் மனவெழுச்சியையும் உண்டுபண்ணுதல் ஆசிரியர்க்கின்றியமையாத இலக்கணங்களில் ஒன்று. தமது பேசுந் திறமையொன்றையே நோக்காது, கேட்பாரது நிலைமையறிந்து சொல்லித் தாம் சொல்லுகின்றவைகளை 'ஏற்றுக்கொள்ளுகின்றார்களா' வெனக் கவனித்தலும், 'ஏற்றுக்கொள்ளவில்லை' யெனத் தெரிந்தால் அதன் காரணத்தை யறிந்து அவர்கள் ஏற்கும் விதத்தால் மீட்டுஞ் சொல்லலும், மாணாக்கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு இனிதின் விடைகூறி, ஐயத்தைப் போக்குதலும், ஆசிரியர் கடமையாகும். மாணாக்-

கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு உத்தரங் கூறுமலும், அவர்கள் அவ்வப்பொழுது நேரும் ஐயப்பாட்டினைத் தாராளமாகத் தெரிவித்துக் கொள்ளுதற்கு இடங் கொடாமலும், தமது கோரமான தோற்றத்தாலும் வன்சொல்லாலும் அச்சுறுத்தி, அவர்கட்கு ஏலாத தண்டங்களை யெல்லாம் விதித்து, அன்னார்பால் அன்பின்றியே யொழுகுபவர்கள், மாணாக்கர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பிரதிபந்தகமாக வந்த பிசாசங்களே யன்றி, ஆசிரியர்களாக மாட்டார்கள். மக்களுக்கியற்கையறிவானது முற்பிறப்பை யொட்டியிராத்தலின், இப்பிறப்பின் வயதளவிற் கேற்ப அறிவிருத்தல் வேண்டுமெனும் நியாயமில்லை. இம்முறைப்படி மாணாக்கர்கள் ஆசிரியரினும் அறிவு மிக்குடையராய் ஓரோவழித் தமது சாதுரிய அறிவை வெளிப்படுத்தலுங்கூடும்; அங்ஙனமாயின் ஆசிரியராயினோர், அவரது அறிவிற்கு வியந்து மகிழ்ந்து இன்புறுதலே தக்கதாகும்.

ஆசிரியரானவர், குறிப்பிட்ட யாதாமொரு பாடத்தைப் போதிப்பவராக மாத்திரமின்றி மாணாக்கர்களுக்கு உயர்நலமுள்ள பொதுவுணர்ச்சியை உண்டுபண்ணி அவரது பொதுநல வாழ்க்கைக்குக் காரணராயிருத்தல் வேண்டும். சுருங்கச் சொல்லின், மாணாக்கர்பால் அன்பும் அநுதாபமு முடையராய் இவரது இகவாழ்வு பரவாழ்வுகளில் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்வோரே உண்மையான ஆசிரியராவர்.

உபாத்தியாயர்கள் நல்லொழுக்க நெறியினின்றும் விலகாமல் முதலில் தம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். என்னை? அவர், தமது போதனையால் மாத்திரமன்று; தமது நடத்தைகளினாலும், தம்மைச் சூழ்ந்துள்ள மாணாக்கர்களையும் பிறரையும் நல்வழிப்படுத்தவேண்டும். ''மாந்தர்க் கினத்தியல்பதாகுமறிவு'' ஆகலின், பலகாலும் ஆசிரியனை அடுத்து இருந்து அவனது போதனையை யேற்றுவரும் மாணாக்கர்களுக்கு ஆசிரியனது குணமும் செயலும் பற்றுமற் போகா. 'சிரேஷ்டனானவன் எதனை ஆசரிக்கின்றானோ அதனை இதரர்களும் ஆசரிக்கின்றார்கள்; அவன் எதனைப் பிரமாணமாகக் கொள்ளுகின்றானோ, அதனை உலகமும் கொள்ளுகின்றது' எனக் கண்ணபிரான் கூறியபடி, சூழ்ந்துள்ளவர்கள், அதனைப் பின்பற்றி நடக்க முயலுகின்றார்கள். ஆக, ஒரு ஆசிரியன் தவறி நடப்பானாயின், அவன், தான் கெடுவதன்றி, உலகத்தையும் கெடுப்பவனாகின்றான்.

முற்காலத்து ஆசிரியர்கள் அன்பே உருவெடுத்தாற் போன்றவர்களாய்க் குன்றா ஒழுக்கமும் இந்திரிய நிக்கிரகமு முடையவராயிருந்த காரணத்தாலன்றோ, பெற்றோர்கள் தம் குழந்தைகளை நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் குருக்களிடம் ஒப்புவித்தனர்; குழந்தைகளும் ஆசிரியனே தஞ்சமாகக் குருகுல வாசஞ்செய்து வந்தார்

கள். குருக்களும் குழந்தைகட்கு உடற்பிணி உண்டாகாமல் பாது காத்தும், உயிர்ப்பிணியாகிய அஞ்ஞானத்தைக் கெடுத்தும் சுகவாழ் வளித்து, அவர்கட்குத் தாய் தந்தையாகவும் மருத்துவனாகவும் தெய்வமேயாகவும் விளங்கினர்கள். தசரதரானவர், தம் குழந்தைக ளான இராம லக்ஷ்மணரைக் கௌசிகரிடம் ஒப்புவிக்கும்பொழுது 'நல்-தந்தை நீ; தனித் தாயும்நீ இவர்க்கு எந்தை! தந்தனன்; இயைந்த செய்க.'' எனக் கூறி விடுத்தனர். மற்றும் கௌசிகர், இராம லக்ஷ் மணர்களின் பூரணமான யோக்கியதைக்கு அநுகுணமாக விருந் தோர் அவர்கட்குக் குருவாகிய வசிட்டரே என்பதனை,

"திறையோடும் அரசிறைஞ்சுஞ் செறிகழற்கால் தசரதனும்
பொறையோடுந் தொடர் மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலாய்! உபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன் காண்.''

என்று ஜனகனிடத்திற் கூறியிருக்கும் அருமைப்பாட்டைப் படிக்கும் பொழுது நம் உள்ளம் களி ததும்புகின்றது.

(இன்னும் வரும்)

பண்டிதர்: மு. வேங்கடசாமி நாட்டார்.
திருச்சிப் பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்.

செட்டு.

'ஆகா றளவிட்டிதாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை'—குறள்.

வருவாயினும் செலவு சுருக்கிச் சிறிது சேர்த்துவைக்கும் வழி வாழ்தலே, 'செட்டு' எனப்படும். 'செட்டு' என்பதற்கு 'லோபத்தனம்' என்று சிலர் பொருள் கொள்ளுகின்றனர். அது தவறு. வருவாயின் தன்மையுணர்ந்து, நன்மை பயப்பனவற்றைச் செய்தும் தீமை பயப் பனவற்றைக் கடிந்தும் வருதலே அது. செட்டாகவாழ்தல், தம் நயம் பிறர் நயம் என்னும் இரண்டினையும் கருதுவோர்களுடைய செய் கையாகும். ஆதலின், இது உத்தமமான நெறியேயாம்.

"ஒத னத்துக்(கு) உரிய தொரு பொருள்
யாதுண்(டு) அன்னதை இத்துணை நாளைக்குப்
போதும் என்ன அளந்து பொருத்துக.
தீதில் நற்பொருள் ஒம்புக சீர்பெற''

நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை வீண் செலவு செய்தல் நேரிதன்று. வரவினும் செலவு குறைந்தே யிருத்தல் வேண்டும்,

நமக்குச் செலவு நேரும்போது பொருளை எத்துணைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தோமோ, அதை மனதிற் பதித்து, "இச்செலவு நியாயமா? ஏற்றதா? இன்றியமையாததா?" என்பவற்றைச் சிந்தித்து,குறைக்கக் கூடியவற்றைக் குறைத்து, வேண்டியவற்றைமட்டும் நேரிய வழியில் செலவிடல் வேண்டும். பூசனிக்காய் போகுமிட மறியாது, கடுகு போகும் இடத்தையே ஆராய்தலும் தவறு.

'வளவனுயி னும் அளவறிந் தழித்துண்' என்ற உபதேச மொழியைக் கடைப்பிடித்து வரவுக்கதிமாகச் செலவிடுதல் கூடாது. அதனால் வரும் பொல்லாங்கு அளவிடற் பாலதன்று.

'ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு.'

என்ற ஔவையாரின் உறுதியுரையை ஆராய்ந்தறிந்து, வருவாயினுஞ் செலவைச் சுருக்குதல் வேண்டும். 'கடன் கொண்டு வாழாமை காண்டலினிதே' யன்றோ?

நம் நாட்டில் பெரும்பாலோர்க்குச் செட்டாகச் செலவிடும் வழக்கம் இல்லை. அவர்கள் வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்ளாமையே இதற்கு முதற் காரணம் ஆம். "ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு" என்பது பழமொழியாதலின், நாம் செலவு செய்யும் எதற்கும் கணக்கு வைத்துக்கொள்ளுதல்வேண்டும் வருவாயினளவையும், செலவினளவையும் அப்போதைக்கப்போது கணக்கிட்டுப் பார்த்துக்கொண்டு வருவோமேயானால், ஆராதூரித்தனமாகச் செலவிடலை நீக்கி, வருவாயினும் செலவு குறைய வழியேற்படும்.

பண்டங்களைப் பாழாக்கலாகாது. "உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை. அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை" என்ற ஓர் பழமொழியுண்டு. ஒரு பொருள் இருக்கும் பொழுதே அதை மற்றும் வாங்குதல் கூடாது. அப்பொருள் செலவாகிக் கஷ்டப்படும்பொழுது வாங்கினால்தான் அதன் அருமை பெருமை தெரிந்து அதை நிதானமாகக் கையாளும் வழக்கம் உண்டாகும். நம் கையிற் பணம் உள்ளதென்று கண்ட கண்ட பொருள்களையெல்லாம் வாங்குதல் அடாது. செலவு நேர்ந்த காலத்து வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டுமேயன்றி கடன் வாங்கலாகாது. டம்ப வழிகளிலும், பிறர் போற்றலை எண்ணியும், வீண் செலவிடுதலை முற்றும் கடிதல் வேண்டும். தனக்குள்ள பொருளினெல்லையை யறிந்து, அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்க்கை, உள்ளன போலத் தோன்றி முற்றும் கெடும். சேமித்து வைத்த பொருளினின்றும், இன்றியமையாத சிலசமயங்களில் எடுத்துச்செலவிட நேர்ந்திருந்தால், செலவிட்ட

அத்தொகையளவு சீக்கிரத்தில் ஈட்டி, அதைச் சேமித்துவைத்துள்ள தொகையுடன் சேர்த்துவிடல் வேண்டும். அத்தொகை சேரும் வரை நமது தினமானச் செலவைச் சிறிது குறைத்துக்கொள்ளல் ஆவசிகம். செல்வராய் இருத்தல் என்பது, நம் வருவாயைப் பற்றிய விஷயம் அன்று. பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனாற் கேடில்லை. பொருள் போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதிருப்பின் போதுமானது. எனவே 'செல்வாதல்' மிதமாகச் 'செலவிடுதலையே பொறுத்தது' என்னும் உண்மையை உன்னி உணர்தல்வேண்டும்.

பிறரைப் போலத் தாமும் செலவழித்தல் வேண்டும் என்று கொள்ளும் அவாவினாலும், மிக்க தாராள குணத்துடனிருத்தலினாலும், பெரும் போகநுகர்ச்சியினாலும், தம் சக்திக்கு மீறின செலவுகளைச் செய்தலினாலும், அஜாக்கிரதையினாலுமே பெரும்பாலோர் செட்டென்பதின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

'மாரி நாளைக்கு வேண்டுவ மற்றெலாம்
சீரி தாகிய வேனிலில் தேடியே
மாரி நாளில் சுகத்தொடும் வைகுக
ஒரும் உள்ளத்(து) உணர்வுடையோர்கள் தாம்'

என்று திருக்காளத்திப் புராணம் சாற்றுகின்றது. வருவாய்க்கு மேற்பட்ட செலவு செய்யாமலும் வரவத்தனையும் செலவு செய்யாமலும் இருந்தாற்றான், ஏதாவது பொருள் சேர்த்துவைத்தல் கூடும். வாழ்வும் தாழ்வும் சகடக்கால்போல் மாறி மாறி வருவன

"குன்றத் தனைஇரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்"
'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

எறும்பானது மழைக் காலத்திற்கு வேண்டும் உணவுப்பொருள்களை வெயிற்காலத்திற்றானே தேடிவைத்துக்கொள்ளுதல் போல, நாமும் முதுமைப் பருவத்திற்காவனவற்றை இளமைப் பருவத்திற்றானே ஈட்டி வைத்துக் கொள்ளுதல் வேண்டும். 'ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்' காலமும் உண்டாதல் போல், நாம் பிணியினாலும் முதுமையினாலும் பல்வேறு இடையூறுகளினாலும் பொருள் வருவாயற்று இன்னலுறுங் காலமும் உண்டாகும். ஆதலின், இளமைப் பருவமும், தேகதிடனும், பொருள் வருவாயும்உள்ள காலத்தே, பின்னர் வேண்டியவற்றைச் சேர்த்து வைக்காமற் போவோமாயின், பிற்காலத்தில் அரைக்காசும் கிடைப்பதரிதாகி இடறுற நேரும். ஆதலின் 'பொருள்தனைப் போற்றிவாழ்' என்னும் ஔவையாரின் உபதேசத்தைச்

செவ்வையுறத் தேர்ந்து, வருவாயில் நான்கில் ஓர் பங்காயினும், அதுவும் ஏலாதேல், பத்தில் ஒருபங்காயினும், அதுவும் முடியாதேல், நம் சக்திக்கு இயன்ற அற்பத் தொகையையேனும் பிற்காலத்திற்கெனச் சேமித்துவைத்தல் நமக்கேற்பட்ட கடமைகளிலொன்றும்.

செட்டு, ஆண் பெண் என்ன இருபாலருக்கும் பொதுவேயாம். எனினும், இல்லிற்குத் தலைவி இல்லாளே யாதலின, பெண்பாலார் இவ்விஷயத்தை ஆடவரினும் சிறிது அதிகமாகக் கவனிக்கவேண்டும்.

'செட்டுள்ள பெண்கையில் செல்வஞ் செழிக்குமே
செந்திருவே! தன் வரவை மிஞ்சி
மட்டில்லா மற்செல விட்டு வரப்பணம்
கெட்டோடிப் போமடி தோழிப்பெண்ணே!'

என்ற 'மின்னார் நீதிக்கும்மிச்செய்யுள்' இங்கு உன்னுதற் குரித்தாம்.

செட்டைக் கைக்கொள்வதினால் அகங்காரம், சினம், ஒழுங்கீனம் முதலிய துர்க்குணங்கள் நம்மைவிட்டு நீங்கும். வாய்மை, நீதி ஒழுங்கு, தன்னடக்கம், நல்லறிவு முதலிய உயரிய குணங்கள் நம்பால் எய்தும். தரித்திரம் தரித்திராது. கிழவயதில் அழவேண்டியதேயில்லை. மனதிற்குச் சாந்தியும் சந்தோஷமும் உற்சாகமும் உண்டாகும். உலகிற்கும் பல நலமானவழிகளில் உதவி செய்தல் இயலும். புகழும் மதிப்பும் உண்டாகும். அறத்தாற்றின் ஈட்டிய அப்பொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும். துன்பத்தைத் தடுக்கும் பகையென்னு மிருளைக்கெடுக்கும். ஆதலின் தமக்கு நலம்தேட விரும்புவோர் வீண் செலவு செய்யாமலும், கடன் வாங்காமலும் செட்டும் கட்டுமாகச் செலவுசெய்து பொருள் சேர்த்து இன்புறுவார்களாக.

வருவா யினுஞ்செலவு மட்டுறவே செய்தல்
பெருமைதரும் செட்டுநெறி பேண்.

சே. ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

ஜார்ஜ் நார்ட்டனும் பச்சையப்ப முதலியாரின் பரோபகாரச் செயல்களும்.

பூதவுடல் பொன்றினும் பொன்றாப் புகழுடம்பு வாய்ந்த பச்சையப்ப முதலியா ரென்பவர், விசுவநாத முதலி யாரென்பவருக்குப் பூச்சியம்மாள் என்பவளிடம் 1754-ல் பிறந்தவர். இவர் தம் தாயின் வயிற்றிலிருக்கும் பொழுதே, தந்தையை யிழக்கும் துர்ப்பாக்கிய முற்றனர். உறவே, சிறிது காலத்திற் கெல்லாம் பூச்சியம்மாளும் அவள் குழந்தையும் ஆற்காட்டு ரெட்டிராயர் என்பவரால்

ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். சீக்கிரத்தில் ரெட்டியாரும் இறக்கவே, சென்னைப் போனி நாராயணப் பிள்ளை என்பரால் யாவரும் பராமரிக்கப்பட்டு வந்தார்கள். இவருடைய உதவியால்தான் நமது முதலியார் கல்வி பயிலத் தொடங்கியது. ஆயினும் முதலியார் இக்கல்வியை விரைவினில் நிறுத்தித் தாமே வருந்தி உழைத்துப் பொருளீட்டித் தம்மையும், தம் குடும்பத்தாரையும் காத்துக் கொள்ள நேர்ந்தது. இவ்வாறு தாம் வருந்திப் பாடுபட்டு வயிறுவளர்த்துப் பிறரையும் காக்க நேர்ந்த காலத்தும், "தீவினை விட்(டு) ஈட்டல் பொருள்" என்பதை ஒரு போதும் மறந்திலர். இம்மட்டோ? 'வருவாயுட் கால் வழங்கி வாழ்தல்' வள்ளன்மை வாய்ந்தோர் இயல் பென்பர். தமது சிறு வருமானத்திற் பாதிக்கு மேல் அவ் விளம்பிராயத்திலேயே இவர் தானதருமங்களிற் செலவிட்டனராம்!

தக்க வயது வந்தவுடன், இவர் 'நிக்கோலஸ்,' 'ஸலைவன்' என்ற வணிக சிரேஷ்டர்களான இரு துரைமகாரிடம் அடுத்தடுத்துத் 'துவிபாஷி' வேலையிலமர்ந்து பெரும் பொருள் ஈட்டினர். பொருட் செல்வம் மிகுதியும் படைத்த அவர்க்குப் புத்திரச் செல்வத்தை ஈசுவரன் அளிக்கவில்லை. முதலியார் சம்பந்தப்பட்ட மட்டில், இஃதொரு குறையாகாது. ஏன்? முதலியார் பலகோடி மக்கட்கோர் நற்றந்தையாகவேண்டுமென்பதே கடவுள் விருப்புப்போலும்,! மற்றும்,

'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;
மிக்க அறமே விழுத் துணை யாவது''

'பறவையினம் பலபயின்று பலன்கொளும் கற்பகத்தரு' வெனவிருந்த இவர், தம் 40-வது வயதில் சிவபெருமான் திருவடி நீழலைச் சார்ந்தனர். யாக்கை நிலையாமையை அறிந்த இத்தூயர், ஒரு நாள் தாம் சுகஜீவியாயிருக்கும்போதே, தம் கடன்காரர்களுக்குச் செல்லவேண்டிய முழுத்தொகையும்—ஒரு பைசாவும் விடாது—கொடுத்துத் தீருமாறும், மீந்துள்ள தம் ஆஸ்தி இன்னின்னவிதம் விநியோகிக்கப்படவேண்டுமென்றும் மரணசாஸனம் எழுதிமுடித்து வைத்திருந்தனர். இஃதறிந்த அவரது சுற்றத்தார் அப்பொருள்களைக் கவரமுயன்று அவர் உயிருடனிருக்கும்போதே வழக்குத் தொடர்ந்து விட்டனர். யாவும் ஈசுவர சங்கற்பத்தின்படியன்றோ நடந்தேறும்? இவர்கள்செய்த பகீரதப் பிரயத்தனம்யாவும் வீணாயின. ஏனெனில் வழக்கிட்ட சிறிது காலத்திற்கெல்லாம் அவர்கள் யாவரும் இறந்துபோயினர். இவர்கள் இறந்த சிறிது காலத்திற்கெல்லாம் இவரும் வழக்குத்தீர்ப்பு முடிவுறுமுன் விண்ணுலகெய்தினர். ஆகவே, முதலியாரது பெருஞ்செல்வம நியாபஸ்தலத்திலேயே இருந்துவரலாயிற்று. இவ்வாஸ்தி முழுமையும் கவர்ந்துகொள்ள அநேகர் வெவ்வேறு சூழ்ச்சிகளும், முயற்சிகளும் புரிந்தனர். நம் நாட்டோர்புரிந்த நற்றவப்பயனாய் இச்சமயம் (1828௵) ஜார்ஜ் நார்டன் என்பவர் சென்னை 'அட்வேகேட்

ஜெனரல்' ஆகஸியமனம் பெற்றுச் சீமையினின்றும் வந்திறங்கினர். இத் துரைமகனர்மட்டும் இருந்திலரேல், பொருள் முழுதும், போலி வழக்கிட்டோர் கையிற் சிக்கிப் போனவிடம் தெரியாமலே போயிருக்கும். முதலியாரது பெருந் தொகைக்கு, அநுமார் வால் போல், வட்டி நாளுக்குநாள் அதிகரித்துப் பிரமாதமாய்க் குவிந்து விட்டதைக் கண்ட இத் துரை மகனர், முதலியாரது தர்மஸ்தாபன விஷயங்களையும் பிறவற்றையும் பற்றிய உண்மையை நடுவு நிலையினின்று நன்கு பரிசிலனைசெய்து ஒரு முடிவுக்கு வந்தார். பிறகு அவர், முதலியார் தம் மரண சாஸனத்திற் கண்டிருந்தபடியே, கடன்கள், ஆலயங்கள், தானதர்மங்கள் முதலியன சம்பந்தமாய்ச் செய்யவேண்டிய யாவையும் குறைவற நிறைவேற்றி, எஞ்சி நின்ற மாப்பெருந்தொகையை ஜனங்களுக்கு அளவற்ற நன்மையும் அறிவு வளர்ச்சியும் அளிக்கும் கற்பகப்பேரிளங்கொடி ஒன்று பற்றிப் படர்தற்கான ஓர் அற்புதக் கொழுகொம்பை நாட்ட உபயோகப்படுத்தினர். இக்கொடி, யாதோ என்னில், பல இடையூறுகளையும்விலக்கி மேற்சென்று ஓங்கிவரும் பச்சையப்பன் கல்லூரியேயாம். ஜார்ஜ் நார்டன் செய்தது இவ்வளவேயோ? இக் கல்லூரியும் முதலியாரது பிற தர்மங்களும் நாடோறும் மேன்மேலும் விருத்தியாக, எவராலும் அசைக்கமுடியாத சட்டதிட்டங்களையும் ஏற்பாடுகளையும் செய்து அழியாப் புகழுற்றனர். இந்நற்செய்கைகளில் நார்டனுக்கு நல்லெண்ணமும் மனவுறுதியும் அளித்த இறைவனது திருவருளைப் பாராட்டுவதினும் நல்லோர் செய்யவல்லது யாதொன்றுமில்லை. சுருங்கச் சொல்லின், பச்சையப்ப முதலியாரின் பரோபகாரப் பண்பையும், ஜார்ஜ் நார்டனின் தர்மஸ்தாபனநன் முயற்சியையும் எவ்வளவு பாராட்டினும் மிகையாகா. ஆயினும், இவ்விருவர் செய்கையினும், 'புறமதஸ்தரும்,' 'உடன்பிறவாமாமலையிலுள்ள மருந்து' போன்றவருமான நார்டன் துரையின் நற்செய்கையே பெரிதும் பாராட்டத்தக்கது. ஏனெனில், முதலியார் பெயரை நாம் புகழ்ந்து போற்றச் செய்தது அவரது செல்வமா? துரைமகனரது தூயமனத் துணையா? பின்னதே யன்றோ? செல்வத்தால்யாது பயன்? அது தீயார் கைப்படின் தீமையும் இகழ்ச்சியும், நல்லார் கைப்படின் நன்மையும் புகழ்ச்சியும் பயக்கும். தீமையிற் புகவெட்டாது அதனைச் செம்மையில் ஓங்கச் செய்த இத் துரைமகனும், 'ஈதற்குச் செய்க பொருளை' என்பதற்கு இலக்காகி நின்ற நம் முதலியாரும், தம் பொய்யுடல் நீக்கினவராயினும் இறந்தோர் ஆகார். இவ்விருவருடைய புகழுடம்பும் "இரவியும் மதியும் உள்ள எல்லையில்காலம் வாழும்" என்பதில் ஐயமின்று.

S. ஜம்புநாதன்

தமிழ் மாணவகன், போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.